www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் :

## தமிழ்

பகுதி - I

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

குறிப்பு : அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

14 x 1 = 14

பலவுள் தெரிக.

1. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம். - காரணம் ________.
   அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்
   ஆ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு
   இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை
   ஈ) அ, ஆ, இ - அனைத்தும்

2. "காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை" - இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள்
   அ) போர்க்கருவி ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

3. கடலின் பெரியது
   அ) உற்ற காலத்தில் செய்த உதவி
   ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி
   இ) தினையளவு செய்த உதவி
   ஈ) இவை அனைத்தும்

4. பொருத்துக :
   அ) நெல்லைத் தமிழ் - 1) கி.ராஜநாராயணன்
   ஆ) சென்னை வட்டாரத் தமிழ் - 2) தி.ஜானகிராமன்
   இ) தஞ்சைத் தமிழ் - 3) புதுமைப்பித்தன்
   ஈ) கோவில்பட்டி வட்டாரத் தமிழ் - 4) ஜெயகாந்தன்
   அ) 4,3,2,1 ஆ) 1,2,3,4 இ) 3,4,2,1 ஈ) 3,2,4,1

5. "உவா உற வந்து கூடும்
   உடுபதி, இரவி ஒத்தார்" - யார் யார்?
   அ) சடாயு, இராமன்
   ஆ) இராமன், குகன்
   இ) இராமன், சுக்ரீவன்
   ஈ) இராமன், சவரி

6. கருத்து 1 : இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்று வருவதே மரபு.
   கருத்து 2 : தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.
   அ) கருத்து 1 சரி
   ஆ) கருத்து 2 சரி
   இ) இரண்டு கருத்தும் சரி
   ஈ) கருத்து 1 சரி, 2 தவறு

7. சென்னைப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்ட ஆண்டு
   அ) 1867 ஆ) 1857 இ) 1877 ஈ) 1856

8. மலரடி - இலக்கணக்குறிப்பு
   அ) உவமைத்தொகை ஆ) பெயரெச்சம் இ) உரிச்சொல் தொடர் ஈ) உருவகம்

9. 'விளியறி ஞமலி' - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?
   அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாளி

10. 'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?
    அ) கணிதம் ஆ) இலக்கியம் இ) வேளாண்மை ஈ) புவியியல்

Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

11. 'ஐயாண் டெய்தி மையாடி அறிந்தார் கலைகள்' என்பது
அ) மணிமேகலை ஆ) நன்னூல் இ) காரிகை ஈ) சிந்தாமணி
12. உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும்' - இத்தொடர் உணர்த்துவது
அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது
ஆ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது
இ) காலநிலை மாறுபடுகிறது ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது
13. 'காலை இளம் வெயில் நன்றாக மேய, தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்' - இக்கவிதையில் ________ பயின்று வந்துள்ளது.
அ) வினைப்படிமம் ஆ) பயன்படிமம் இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம்
14. 'பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமான பேய் பிடியா திருக்க வேண்டும்' - என்னும் தொடர் இடம் பெற்ற நூல்
அ) தெய்வமணிமாலை ஆ) திருவள்ளுவ மாலை
இ) குருமணி மாலை ஈ) திரிபுரை மாலை

## பகுதி - II

### பிரிவு - 1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 x 2 = 6

15. சூரிய ஒளி பட்டவுடன் நகரம் எவ்வாறு மாறியதாக அய்யப்ப மாதவன் குறிப்பிடுகிறார்?
16. கலி விழா, ஒலி விழா - விளக்கம் தருக.
17. சினத்தை ஏன் காக்க வேண்டும்?
18. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 2 = 4

19. 'வெள்ளையர் நகரம்' என்று அழைக்கப்படுவது எது?
20. புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு எழுதுக.
21. ஓலையில் எழுதுவதற்குரிய எழுத்தாணிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

### பிரிவு - 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7 x 2 = 14

22. *தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.*
நம் மாநிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது.
23. *ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.*
அ) இன நிரை ஆ) உள்ளொன்று
24. *ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.*
அ) அமர்ந்தான் ஆ) விளங்கி
25. *விடைக்கேற்ற வினா அமைக்க.*
அ) குடும்பம் என்ற சொல் முதன் முதலில் திருக்குறளில்தான் இடம் பெற்றுள்ளது.
ஆ) 1856 - இல் தென்னிந்தியாவின் முதல் தொடர் வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது.
26. *உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைத்திடுக.*
அ) கிணற்றுத் தவளை போல
ஆ) அச்சாணி இல்லாத தேர் போல

Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



27. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக்குக.
(ஐ, ஆல், கு, இன், அது, கண்)
அ) மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும்.
ஆ) போட்டி வெற்றி பெற்றது கலைச்செல்வி பாராட்டுகள் குவிந்தன.

28. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்கவும்.
அ) பலகை ஆ) தலைமை

29. கலைச்சொல்லாக்கம் தருக.
அ) Train Track ஆ) Railway Signal

30. முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.

பகுதி - III

பிரிவு - 1

**2 x 4 = 8**

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.

31. "வருபவர் எவராயினும்
நன்றி செலுத்து" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

33. இல்வாழ்க்கை சிறப்புற அறநெறியோடு வாழ்தலின் முக்கியத்துவத்தை வள்ளுவர் வழி நின்று விளக்குக.

34. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.

பிரிவு - 2

**2 x 4 = 8**

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.

35. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

36. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

37. மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

38. சென்னையின் நீர்நிலைகளையும், வடிகால்களையும் குறித்து எழுதுக.

பிரிவு - 3

**3 x 4 = 12**

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.

39. அ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.
- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

*(அல்லது)*

ஆ) நிரல்நிறை அணியை சான்றுடன் விளக்குக.

40. இலக்கிய நயம் பாராட்டுக.
*(மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)*

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா !
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார் !
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார் !

- கவிமணி தேசிய விநாயகம்

Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



41. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

அ) யானைக்கும் அடி சறுக்கும்

(அல்லது)

ஆ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்

42. பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

43. தமிழாக்கம் தருக.

1) If you want people to understand you, speak their language.
2) A new language is a new life.
3) The limits of my language are the limits of my world.
4) Knowledge of languages is the doorway to wisdom.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3 x 6 = 18

44. அ) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

45. அ) 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடலைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக.

46. அ) "கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன" - இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.

(அல்லது)

ஆ) 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் .......... கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

## பகுதி - V

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக. 4 + 2 = 6

அ) 'குகனோடும்......' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'வரும்' என முடியும் குறள்.

******

Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com